தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 99

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விகிதம்:
1 வருடம் ரூ 24—0—0
6 மாதம் ரூ 12—0—0
3 மாதம் ரூ 6—0—0
முன்பணம் இல்லாமல் இதழ் அனுப்பப்படாது.

THE "NAM NADU" A TAMIL DAILY. THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: புரட்டாசி 21௨ புதன் (7—10—53) ☆ ☆ ☆ வெளியூர்: புரட்டாசி 22௨ வியாழன் (8—10—53)

வைத்தியநாத ஐயர் வக்கிரபுத்தி!

—(:)—

'பலாத்காரத்தில் ஈடுபடாதீர், பதிலுக்குப் பதில் தாக்காதீர்' என்று காங்கிரசாருக்கு மதுரை நரியின் ஊளை!

தோழர்கள் எஸ். முத்து, அய்யாசாமி, அலி, ராஜமான் உள்ளிட்ட 16 தோழர்கள் பாதுகாப்பில்

—(:)—

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எட்டு நபர்களும் கைது

—(0)—

காங்கிரஸ் வெறித்தனத்தைக் கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கையாம்!

மதுரைக்கு நேரு வந்ததையொட்டி தி. மு. கழகத்தினருக்கும், காங்கிரசாருக்கும் ஏற்பட்ட கைகலப்பில் அடிதடியும், கத்திக் குத்து நிகழ்ச்சிகளும் ஏற்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக காங்கிரஸ் இளைஞர் முன்னணியைச் சேர்ந்த எண்மரையும், மற்றும் மதுரை நகர் தி. மு. கழகத்தின் முக்கியஸ்தர்களான தோழர்கள் எஸ். முத்து, எம். அய்யாச்சாமி, கே. எஸ். ராசமான் ஆகியோர் உட்பட 16 பேரையும் போலீசார் கைது செய்துள்ளனர்.

மதுரை, அக். 6—

நேற்றிரவு 8 மணிக்கு, மேல மாசி வீதியில் தையற் கடை வைத்திருக்கும் கந்தன் என்பவரையும், அவருடைய தம்பி கருப்பையா என்பவரையும், மற்றொருவரையும் யாரோ சிலர் தாக்கி அரிவாளால் வெட்டி காயப்படுத்தி விட்டு ஓடிவிட்டனர்.

தாக்கப்பட்டவர்களுக்குப் பலத்த காயமேற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. காயம் பட்ட மேற்கண்ட மூவரும் இளைஞர் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறது.

நகரின் முக்கிய இடங்களில் பலத்த போலீஸ் பந்தோபஸ்து வைக்கப்பட்டிருக்கிறது.

நிகழ்ச்சியை ஒட்டி, காங்கிரஸ் பிரமுகர் ஏ. வைத்தியநாத அய்யர் காங்கிரஸ் தோழர்களுக்கு ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார். அதில் காங்கிரஸ் தோழர்கள் யாரையும் திருப்பித் தாக்கக்கூடாதென குறும்புத்தனமாகக் குறிப்பிட்டுள்ளார்.

திராவிடர் கழக மாநாட்டுப் பந்தல் அன்று தீக்கிரையாக்கப்பட்டு, நமது தோழர்கள் தாக்கப்பட்டபோது, தோழர் வைத்தியநாதய்யர் இவ்வாறுதான் ஓர் அறிக்கை விடுத்தார். அரசியலில் நுணுக்கம் தெரிந்தவர்கள் யாரும் இதை மறந்திருக்கமாட்டார்கள்.

நம்ப முடியவில்லையே!

கெய்ரோ, அக். 6—

கெய்ரோவில் புரட்சிகர டிரிபியூனல் முன்பு விசாரிக்கப்பட்ட முன்னாள் பிரதமர் இப்ராஹிம் ஹாதி வழக்கின் போது, 1940ல் அவர் மிகவும் ஏழையாக இருந்தார் என்றும், ஆனால், 1952ல் அவருக்கு 1000 ஏகரா நிலமும், 80,000 பவுன் சொத்தும் இருந்ததென்று பிராசிகியூஷன் தரப்பில் கூறப்பட்டது.

அரசியல் சட்டக் கொலை!

★

"கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களுக்கு இந்தியாவிலேயே இடமில்லை."

என திருப்பூர் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் ஆச்சாரியார் குறிப்பிட்டார்.

—'சுதேசமித்திரன்' 6—10—53

காங்கிரசார், இருவரை சுட்டு கொன்று அறுபது நபர்களை காயப்படுத்தினர்!

தர்மசாகர் கிராமத்தவர் மீது காங்கிரஸ் கட்சியினர் நடத்திய 'கொலை விளையாட்டு'

ஐதராபாத் சட்டசபையில் ஒத்திவைப்புப் பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது

ஹைதராபாத், அக். 6—

"காங்கிரஸ் ஆட்சியாளர்களின் பாதுகாப்புடன், அனுமதி பெற்றக் கைத் துப்பாக்கிகளைக் கொண்டு, கிராமவாசிகளை, மூர்க்கத்தனமாக காங்கிரஸ் கட்சியினர் தாக்கியுள்ளனர். இதன் விளைவாக 2 பேர் மரணமடைந்தனர்; 60 நபர்கள் காயம்பட்டுள்ளனர்"

—இவ்வாறு குற்றஞ் கூறி, சென்ற மூன்றாம் தேதி, வாரங்கலுக்கு 15 கல் தொலைவில் உள்ள தர்மசாகரம் என்னும் சிற்றூர் மக்களை, காங்கிரஸ் கட்சியினர் கைத் துப்பாக்கியால் சுட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளதைக் குறித்து, ஐதராபாத் சட்ட சபையில், எதிர்க் கட்சித் தலைவரான தோழர் வி. டி தேஷ் பாண்டே கொண்டுவந்த ஒத்திவைப்புப் பிரேரணையை சட்ட சபைத் தலைவர் தோழர் கே. எஸ். வைத்தியா அனுமதித்துவிட்டார்.

இது பற்றி சட்ட சபையில் உள் நாட்டு மந்திரி பின்டு அவர்கள், சம்பவத்துக்கு வருந்தியும், பொறுப்புள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் விசாரணைசெய்து வருவதாகவும், குற்றவாளிகள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், தண்டிக்குள்ளாக்கப்படுவார்கள் என்றும் எதிர்க் கட்சியினருக்கு வாக்குறுதி கொடுத்தார்.

ஒத்திவைப்புப் பிரேரணையை மறுநாள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுமென்று தலைவர் அறிவித்தார்.

மொழிவழி மாநில அமைப்பை இந்தி வெறியர் தாண்டன் எதிர்க்கிறார்

இந்தியாவை துண்டாடவே உதவுமென அங்கலாய்ப்பு

அலகாபாத், அக். 6—

"மொழிவழி மாநில அமைப்புக் கோரிக்கையை நான் எதிர்க்கிறேன். இது, நாட்டைத் துண்டாடுவதில் வந்து முடிவடையும்."

இவ்வாறு முன்னாள் காங்கிரஸ் தலைவரான புருஷோத்தமதாஸ் தாண்டன், அலகாபாத் பல்கலைக் கழகத்தில் இந்தி சங்கத்தைத் துவக்கி வைக்கும்பொழுது குறிப்பிட்டார்.

உத்திரப்பிரதேசத்தில் பல மொழி பேசப்படுவதாகவும், மொழிவழி பிரிப்பதாக இருந்தால் அழிவில்தான் கொண்டு போய் விட்டுவிடும் என்றும் அவர் எச்சரித்தார்.

மாணவர்கள், தங்கள் நடைமுறைக்கு அறிவு, தர்க்க ஞாயம் முதலியவைகளைத் துணைகொள்ள வேண்டுமேயல்லாது, வெறும் பொறுமையை கொள்ளக் கூடாது என்றும், பணம் உண்மையான சுகத்தைக் கொடுக்காது என்றும், நல்ல மனப்பண்பும், அறநெறி வளர்ச்சியுந்தான் வாழ்க்கையின் சிறந்த இன்பத்தைத் தரவல்லது என்றும், இந்தி, இந்து மதவெறியரான தாண்டன் தனது பேச்சில் குறிப்பிட்டார்.

காங்கயம் உபதேர்தல்

ஈரோடு, அக். 6—

காங்கயத்தில் நடைபெற இருக்கிற சென்னை சட்டசபை உபதேர்தலில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் தோழர் ஏ. கே. சுப்பராய கவுண்டரும், சுயேச்சையாக தோழர் பழனிச்சாமி கவுண்டரும் போட்டி இடுகின்றனர். சுயேச்சை அபேட்சகரை தமிழ் நாடு பி. எஸ். பி. கட்சி ஆதரிப்பதாகத் தெரியவருகிறது.

தேர்தல் நவம்பர் மாதம் 8-ந் தேதி நடக்க இருக்கிறது.

மேட்டுப்பாளையத்தில் 'தேசிய திருவாளர்'களின் திருப்பணி

தி. மு. க. தோழர்கள் தாக்கப்பட்டனர்

(டிரங்க் செய்தி)

மேட்டுப்பாளையம், அக். 6—

இந்தியத் துணைக்கண்டப் பிரதமர் நேரு, மலம்புழா அணைக்கட்டைப் பார்வையிடச் செல்வதையொட்டி, மேட்டுப்பாளையம் தி. மு. கழக செயலாளர் தோழர் சண்முகநாதன் உள்ளிட்ட தோழர்கள் இரத்தினம், கிட்டு, சுப்பையா, நஞ்சய்யா ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

அதன்பின், குன்னூர் தோழர் ஒளியழகன் தலைமையில், புஞ்சை புளியம்பட்டி தோழர்கள் அமைதியாகக் கருப்புக் கொடி காட்டினர்.

நேருவுக்கு மிக அருகில் சென்று கருப்புக் கொடி காட்டிய தோழர் சண்முகம் பலமாகத் தாக்கப்பட்டார்.

மொத்தம் கைதான 58 தோழர்களில், 50 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

அன்றிலிருந்து, 'தேசியத் திருவாளர்கள்,' தி. மு. கழகத் தோழர்களை பற்பல இடங்களில் தாக்கி வருகின்றனர். போலீசாருக்கு அவ்வப்போதைக்கப்போது செய்திகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஐவர் சிறையில்!

இன்று

37-வது நாள்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை : 7-10-1953 புதன்

சாணக்கியர்!

(3)

காங்கிரஸ் ஊழியர்களை, அவர்கள் ஊழியத்தால் உயர்ந்த காங்கிரஸ் தலைவர்கள் மறந்துவிட்டனர். தன்னலங் கருதாது, உயிரையும் துரும்பாக மதித்துப், பணி புரிந்த பணியாளர்களை, தலைவர்கள் நட்டாற்றில் விட்டு விட்டனர்.

'தேச விடுதலை', 'வெள்ளையனை வெளியேற்றல்' என்றெல்லாம் சுதந்திர தாகத்தை ஊட்டி, தொண்டர்களைக் கசக்கிப் பிழிந்தெடுத்து விட்டனர் தலைவர்கள். சுதந்திரம் கொடுத்த சாதனத்தைக் கொண்டு, பொது மக்களுக்கு வளம் சேர்க்க வேண்டி இருக்க, அதற்குப் பதிலாக, மேலும் மக்களை அடக்கி ஒடுக்க, அந்த சாதனத்தைத் தலைவர்கள் என்பவர்கள் பயன் படுத்தி வருகின்றனர். நாட்டு மக்களின் அவல வாழ்வு இந்த உண்மையைத் தான் மெய்ப்பித்துக்கொண்டு இருக்கிறது, நாட்டில் உள்ள வறுமைப் பிணியை நாம் எடுத்துக் கூறுவதைக் காட்டிலும், காங்கிரஸ் தலைவர்கள் தினம் தினம் எடுத்துக் கூறிடுவது நல்ல விளக்கத்தைக் கொடுக்கிறது.

எந்தப் பொதுமக்கள் பெயர் கூறி சுயராஜ்யம் கேட்டார்களோ, அந்தப் பொதுமக்களையே முழுதாக மறந்துவிட்டு, சரிந்துபோன தங்கள் சொந்த வாழ்வை செப்பனிட்டுக் கொள்ளுவதில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற ஆட்சிபீடமேறிகளா, சொந்தக் கட்சித் தொண்டர்கள் ஒரு காலத்தில் செய்த மகத்தான சேவைக்கு, நன்றிகாட்டி கைமாறு செய்யப் போகிறார்கள்? செய்ய எண்ணமிருந்தால் இதற்குள் செய்திருக்க வேண்டும். இதுவரை ஊழியர்களை உதாசீனம் செய்து நடந்து வந்தவர்களா, இனி உதவி செய்ய முன்வரப் போகிறார்கள்?

அவர்களை ஊழியர்கள் நம்புவதும், அவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகளை தலைவர்கள் பரிவாக அள்ளி வீசுவதும், வெறும் மூதல்தர அரசியல் சூதாட்டம் என்பதை ஊழியர்கள் மறந்துவிடக்கூடாது.

அமைச்சராக ஆச்சாரியார் இருப்பார், அதைப் பார்த்து, அவரைப் போலவே, தாங்களும் 'அமைச்சராக' இருப்பதாக ஊழியர்கள் எண்ணிக் கொள்ள வேண்டும் என்றும், காமராஜர் காங்கிரசின் தலைவராக இருப்பார், அதைப் பார்த்து, அவரைப் போலவே, தாங்களும் 'தலைவராக' இருப்பதாக ஊழியர்கள் நினைத்துக்கொள்ள வேண்டுமென்றும், ஊழியர்களுக்கு உருக்கமாக உபதேசிக்கிறார் தோழர் காமராஜர். அமைச்சர், தலைவர், அது இது, என்றெல்லாம்கூட தொண்டர்கள் தங்களை உண்மையிலேயே தீர்மானித்துக் கொள்ளலாம்.

அந்த உறுதியான சங்கல்பம், தொண்டர்களின் பசியைப் போக்க உதவாதே! ஊழியர்களின் குழந்தைக் குட்டிகளுக்கு ஒரு கவளம் சோற்றுக்கு அந்த நினைப்புப் பயன்படாதே! அதிகம் கூறுவானேன்? அந்த உயர்ந்த 'அமைச்சர்,' 'தலைவர்' என்ற எண்ணம், ஊழியர்களின் அரை நாண் கயிறுக்குக்கூட வழி செய்யாது!

போதனை, பரிவு, கனிவு, அனைத்தும் வெறும் முகஸ்துதி! ஊழியர்களின் உழைப்பை மேலும் உறிஞ்சுவதற்கு செய்யப்படும் மாயாஜாலம்! இன்னும் ஊழியர்களிடம் தங்கி இருக்கிற எலும்பு, தசை, ரத்தம், உயிர் அத்தனையையும் பலி கேட்கும் மாபாதகம்!

'கொட்டைப் பாக்கு நொறுக்கித் தராத சித்தப்பன், சோடி வரையில் கொண்டுவந்து வழி விட்டானும்' என்ற ஒரு மொழி உண்டு. அதைப் போலத்தான், கொதித்துப் போயிருக்கும் ஊழியர்களின் கும்பிக்கு கூழோ, கஞ்சியோ ஊற்றுவதைவிட்டு விட்டு, செவிக்கினிமை ஊட்டும் மாரீசப் பணியிலே ஈடுபடுகிறார் காமராஜர்.

"துப்பாக்கி முனையில் நின்று உயிர் தியாகம் செய்யத் தயாராக இருந்தோம். எதற்காக? பெற்றச் சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டியது மிகஅவசியமானதாகும். சுதந்திரத்தைக் காப்பாற்ற உயிரையும் கொடுக்கத் தயார் என்ற ஆர்வம், உணர்ச்சியுடன் காங்கிரஸ் ஊழியர்கள் நடக்க வேண்டும்"

இப்படி, காமராசர் உருக்கமான வேண்டுகோளை, ஊழியர்களுக்கு, அர்ப்பணம் செய்கிறார். மேலும் அவர் குறிப்பிடுகிறார், "நமக்கு ஜனக் கட்டு, ஜன பலம் முறை எல்லாம் இருக்கிறது" என்றும் நாட்டின் உண்மை நிலைமை மறைத்துக் கூறுகிறார்.

ஜனக் கட்டு, ஜன பலம் பெரிய அளவில் காங்கிரசுக்கு இருக்குமானால், சுதந்திரத்துக்கு ஆபத்து வந்துவிடும் என்று காமராசர் அச்சப்படத் தேவையே இல்லை. அவர்படும் அச்சமும், சுதந்திரத்தைக் காப்பாற்ற ஊழியர்கள் உயிரைக் கொடுக்க வேண்டுமென்ற பேச்சும், அவர் கூறுவது போல ஜன பலம், ஜனக் கட்டு, முன் போலவே காங்கிரசுக்கு இருந்து வருகிறது என்பதையா காட்டுகிறது? ஜன பலம் ஜனக் கட்டு இப்பொழுது காங்கிரசுக்கு இல்லை என்று காமராசர் கூறாமல் கூறுகிறார் என்பதையல்லவோ அவர் பேச்சு படம் பிடித்துக் காட்டுகிறது?

ஜன பலம், ஜனக் கட்டு காங்கிரசுக்கு அரணாக இருக்குமானால், பஞ்சத்தில் அடிபடவேண்டிய கட்டாயம் ஊழியர்களுக்கு ஏற்பட்டு இருக்காதே. ஊழியர்களோ, சாதாரணமானவர்களுமல்ல. துப்பாக்கி முனைக்கும் மார்பைக் காட்டக்கூடிய நெஞ்சுரம் கொண்டவர்கள் இவர்கள் பட்டினிப் பட்டாளமாக மாறி, பசி பசி எனக் கூக்குரல் எழுப்புவது, காங்கிரசுக்கு ஜனக்கட்டு, ஜனபலம் இருக்கிறது என்பதையா விளக்குகிறது?

காமராஜருக்கும் நாட்டின் உண்மை தெரியும்; சில பல ஊழியர்களுக்கும் அது தெரியும். கள்ளங் கபடமற்ற ஊழியர்களை மயங்கச் செய்து, அவர்களுடைய உயிரை வாட்டி வதைப்பதற்கே, காமராஜர் இந்த ஏமாற்றுப் பணியில் ஈடுபடுகிறார். ஊழியர்கள் உண்மை உணர்ந்து கண்விழிக்க வேண்டும்.

பசியின் கொடுமை அதிகரித்துப் போனால், ஆட்சியாளர்களின் அடக்குமுறை அதனிலும் கூடுதலாகப் போனால், பொதுமக்களை வேட்டையாட, நம்பிக்கையான சொந்த ஆட்கள் தேவைப்படுகிறது அதற்காகத்தான் மிஞ்சியிருக்கும் ஊழியர்களின் எஞ்சியிருக்கும் உயிர் தேவை என்று, காமராஜர், நாட்டு மக்களின் மனப்போக்கை மறைத்துப் பேசுகிறார்; திரித்துக் கூறுகிறார்.

நாடு சிறியதாக இருந்தாலும், பெரியதாக இருந்தாலும், இந்தக் காலத்தில் அந்நிய நாட்டின் படையெடுப்பு என்ற பயத்திற்குத் துளியும் இடமில்லை. உலகம் இரண்டு முகாம்களாகப் பிரிந்துபோய் இருக்கிறது. இவைகளில், இந்தியா எந்த முகாமில் இருக்குமென்பதற்கு ஆருடம் பார்க்கத் தேவையில்லை. ரூபிள் ஓசையைக் காட்டிலும் டாலர் எழுப்பும் ஓசைதான் இந்தியாவிற்குப் பிடித்தமான கீதமாக இருக்கிறது என்பது தெளிவு. அந்நியப் படையெடுப்பினால், ஊழியர் பெற்ற சுதந்திரத்துக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று ஒருவரும் பயப்படத் தேவையே இல்லை.

காமராசருக்கு இதுவும் தெரியும். தான் கண்ணை மூடிக் கொண்டால் பூலோகமே இருண்டுவிடும் என்று, பூனை எண்ணுமாமே, அதைப்போலவே காமராசர் உண்மையை மறைத்து விடப் பார்க்கிறார். கோணல் வழியிலே ஊழியர்களை இட்டுச் செல்ல திட்டம் தீட்டியிருக்கிறார் காமராசர். நாட்டில் உள்ள எதிர்ப்புக் கட்சிகளைத்தான், 'சுதந்திர விரோதிகள்' என்று சித்தரித்து, அவைகள் மீது ஊழியர்களை ஏவப்பவே, ஊழியர்களுக்கு உண்மையை மறைக்கிறார்; உருக்கம் காட்டுகிறார். இதையும் ஊழியர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

கூட்டுத் தோழர்களை சந்தர்ப்பம் வரும்பொழுது, காலைவாரி விடுவதும், பழிபோட்டுத் தூக்கிலேற்றுவதும், அவமானப்படுத்துவதும், மூலையில் உட்கார வைப்பதும், பதவி தெய்வத்தின் பொன் மொழிகளாகும் பாசிச நோயின் தன்மை, அமைப்பு இதுதான்.

"பலர் வேலையில்லாது கஷ்டப்படுவது எனக்குத் தெரியும். இதற்கு ஏதாவது பரிகாரம் தேடுவது கஷ்டமானதாக இருக்கிறது. நம் கட்சி பெரிய கட்சி. ஊழியர்கள் சமுத்திரம்போல் இருக்கிறார்கள். ஆகவேதான், கஷ்டம்."

இப்படி, காமராசர், ஊழியர்களை, காங்கிரஸ் அலட்சியப் படுத்தி விட்டதற்கு, 'எண்ணிக்கை அதிகம், எனவே ஒன்றும் செய்ய முடியவில்லை' என்று நொண்டிச் சமாதானம் கூறப் பார்க்கிறார். ஒரு காலத்தில் யானை போல் இருந்த ஊழியர் கூட்டம் இன்று எறும்பு போல் மெலிந்து போய் இருக்கிறது என்ற உண்மையை ஊழியர்களும் அறிவர்; காமராசரும் அறிவார். 'ஒன்றும் இல்லை போங்கள்!, என்று காரணம் காட்டாமலே கூறுவதற்குப் பதிலாக, விரல்விட்டு எண்ணக்கூடிய ஊழியர்களை வைத்துக்கொண்டாவது, காங்கிரஸ் பாசிச ஆட்சியை எதிர்காலத்தில் நிலைநாட்டலாம் என்ற நைப்பாசையில், எண்ணிக்கைக் கூடுதல் என்று கற்பனை காரணம் கூறி, ஊழியர்களுக்குத் திருநாமம் தீட்டுகிறார் அந்தப் பெரியவர்!

மாநாட்டில், ஆச்சாரியார், ஊழியர்களைப் பார்த்துக் கூறினது அனைத்தும் கடைந்தெடுத்த முகஸ்துதியாகும். மனிதனுக்கு இயல்பாக உள்ள 'புகழ்' விரும்பும் புத்தியை, மிக மிகச் சாதுர்யமாக, தனது பேச்சுத் திறமை முழுதும் காட்டி, ஊழியர்களுக்குத் திருப்தி ஏற்படுத்த சாணக்கியர் முயற்சித்திருக்கிறார். வெற்றியா, தோல்வியா என்பதை நிச்சயம் சொல்ல முடியாது. தோல்வி தெரிய சிலநாள் செல்ல வேண்டும்.

"உங்கள் குறைகளை, கோரிக்கைகளை நேருஜியிடம் இப்போது சொன்னாலும் பிரயோஜனம் இல்லை. காமராஜிடம் சொன்னாலும் பிரயோஜனம் இல்லை. என்னிடம் கேட்டால் ஒன்றும் முடியாது."

இவ்வாறு, ஊழியர்களுக்கு, திருவாய் மலர்ந்தருளினார், சென்னைப் பிரதமர் சாணக்கியர்.

ஊழியர்களை, ஆச்சாரியார் புகழ்ந்ததோ கொஞ்சம் நஞ்சம் அல்ல, 'இஷ்ட தெய்வத்தைக்கூட அப்படிப் பஜித்து இருக்க மாட்டார். தொண்டர்களை, அவ்வளவும் இனிக்க இனிக்கப் புகழ்ந்துவிட்டு, 'பிரயோசனமில்லை' 'முடியாது என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பதாக திட்டவட்டமாகக் கூறிவிட்டார் ஆச்சாரியார்.

இதைக் கண்டு காமராசருக்கு, கொஞ்சம் கண் கலக்கம் ஏற்பட்டது போல் தெரிகிறது. இதை, அப்படியே உண்மை என்று ஏற்றுக் கொள்ள முடியாது. இருந்தாலும் கொஞ்சம் உண்மை இல்லாமலும் இல்லை அவர் கூறுகிறார்:-

"இப்பிரச்னை மாநாடு கூட்டிப் பேச வேண்டியதில்லை. நமக்குள் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்."

காமராஜரின், இந்தப் பேச்சு, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக்கும், ஊழியர்கள் மாநாட்டிக்கும் உள்ளத் தொடர்பு எத்தகையது என்பதைச் சுட்டிக் காட்ட உதவுகிறது.

மாநாடு கூட்டினதிலே காமராஜருக்கு விருப்பம் கிடையாதென்றே இப்பேச்சு எடுத்துக் காட்டுகிறது. வேண்டா வெறுப்பாக மாநாட்டிற்கு ஒத்துக்கொண்டார், கலந்து கொண்டார் காமராஜர் என்று, பிறர் நம்புவதற்கு இந்தப் பேச்சு ஒன்றே போதிய அத்தாட்சி.

இந்த மாநாட்டைக் கூட்ட சாணக்கியம் கையாளப்பட்டு இருக்கிறது. கீழ்ப்பாக்கம், முக்கிய பாத்திரமேற்று நடித்திருக்கிறது இதில் என்பது புலனாகிறது. வாழ்க, சாணக்கியர். இறுதி நாளை.

பாக். அ. நி. சட்டம் உருவாகியது

முகமதலியின் முயற்சி வெற்றி

கராச்சி, அக். 5—

பாகிஸ்தான் அரசியல் நிர்ணயச் சட்டத்தைத் தயாரிப்பதில் இருந்த தகராறு தீர்க்கப்பட்டு, புதிய திட்டம் உருவாக்கப்பட்டு விட்டதாக தலைமை அமைச்சர் முகமதலி இன்று நிருபர்கள் கூட்டத்தில் கூறினார்.

இந்தப் புதிய திட்டப்படி, பாகிஸ்தானில் இரண்டு சட்ட சபைகள் ஏற்படுத்தப்படும்.

மேல்சபை ஐந்து தொகுதிகளைக் கொண்ட ஐம்பது உறுப்பினர்கள் அடங்கியதாக இருக்கும். ஐந்து தொகுதிகளுக்கு சம உரிமை வழங்கப்படும்.

கீழ்சபையில் தொகுதிகளின் மக்கள் தொகைக்குத் தக்கவாறு, 300 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். மேல் சபை, கீழ்சபை இவை இரண்டிற்கும் சம அதிகாரம் வழங்கப்படும்.

பாகிஸ்தானுக்கு தலைவரைத் தேர்ந்தெடுக்க இரு சபைக்கிடையே கருத்து வேறுபாடு தென்பட்டால், இருசபையும் ஒன்றாகக் கூடி விவாதிக்கும். இந்தக் கூட்டுக் கூட்டத்தில் கிழக்கு, மேற்கு பாகிஸ்தான் உறுப்பினர்கள் 30 சத விகிதத்தினர் கலந்து வாக்களிக்க வேண்டும்.

இந்த இரண்டு தொகுதிகளில் ஒரு தொகுதியிலிருந்து ஜனாதிபதியும், மற்றொரு தொகுதியில் பிரதமரும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

கூட்டுக் கூட்டத்தில் 30 சத விகித உறுப்பினர்கள் வராவிடில் அமைச்சரவையின் அனுமதியின் பேரில் ஜனாதிபதி சபையைக் கலைக்கலாம்.

எதிரி விமானங்கள் வருகின்றன!

லண்டன், அக். 6—

எதிரி விமானங்கள் தூரத்தில் பறந்து வரும்போதே, அவைகளின் வருகையை கேந்திர நிலயங்களுக்கு அறிவிக்கும் பிரணை மண்டலங்கள் பிரிட்டனில் ஏற்படுத்தப்படுமாம். அணுசக்தி உற்பத்தி நிலயங்களைப் பாதுகாக்க இக்கிரணங்கள் பயன்படுமாம். இக்கிரணங்களை விமானம் தாண்டும்போது, ஒருவித ஒலிபரப்பப்படுமென்றும், அப்போது, அபாயத்தை அறிந்து கொள்ள முடியுமென்றும் தெரிகிறது.

ஆயுள் தண்டனை

பெய்ரூத், அக். 5—

எகிப்தின் முன்னாள் தலைமை அமைச்சரான இப்ராஹிம் அப்துல் ஹாதிமீது, நாட்டுத் துரோகக் குற்றத்திற்காக கடந்த வியாழனன்று விதிக்கப்பட்ட மரண தண்டனையை, ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டிருப்பதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்படுகிறது.

30 தூத்துக்குடி தோழர்களை ஜாமீனில் விட உயர் நீதிமன்ற உத்தரவு

ஜாமீனில் விட கீழ்கோர்ட் மறுத்தது கண்டு நீதிபதியின் வருத்தம்

சென்னை, அக். 6—

"இவைகள் ஜாமீனில் விடத்தகுந்த குற்றங்களே. ஜாமீனில் வெளியே வருவதற்கு உயர்நீதிமன்றத்திற்கு அவர்களை விரட்டினதற்காக நான் வருந்துகிறேன். கீழ்கோர்ட்டே அவர்களை ஜாமீனில் விட்டிருக்கலாம்."

ரயில் நிறுத்தப் போரில், ஜூலை 15-ல் கைதான தி. மு. கழகத் தோழர்களில், 30 பேரை ஜாமீனில் விடும்படி, உயர்நீதிமன்ற நீதிபதி என். சோமசுந்தரம் அவர்கள் நேற்று உத்தரவிட்டார்.

தோழர்களின் சார்பில் வழக்கறிஞர் கே. நாராயணசாமி அவர்களும், எம். திருஞானசுந்தரம் அவர்களும் ஆஜரானார்கள். இதோடு தூத்துக்குடி தோழர்கள் 63 பேர் ஜாமீனில் விடப்பட்டிருக்கின்றனர்.

பொருளாதார ஆலோசகர் பதவி ரத்தாகிறது

டாக்டர் பி. நடராசன் மத்திய சர்க்காருக்குப் போகிறார்

சென்னை, அக். 6—

சென்னை சர்க்காரில் பொருளாதார ஆலோசகர் என்ற ஒரு ஏற்பாடு இருந்து வந்தது ரத்து செய்யப்படுகிறது. அந்தப் பதவியில் இருந்து சிறந்த தொண்டாற்றியுள்ள டாக்டர் பி. நடராசன் அவர்கள், இந்திய சர்க்காரின் கீழ் பதவி பெற்று பம்பாயில் வேலை பார்ப்பார் என்று தெரிய வருகிறது.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

30—9—53 மாலை 6 மணிக்கு நடைபெற்ற நிர்வாக சபைக் கூட்டத்திற்கு, ஏ. சரவணன், பி. ஏ., அவர்கள் தலைமை வகித்தார். மறைந்த பெரியார்கள் திரு. வி. க., தி. ந. சபாபதி ஆகியோர் மறைவு குறித்து அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்தியா ஒரே நாடாம்!

கோவையில் நேரு

கோயம்புத்தூர்; அக். 5—

இன்று மாலை, சிதம்பரம் பிள்ளை பூங்காவில் பிரதமர் நேரு பேசுகையில், "சுதந்திரம் பெற்றதுடன் நம் பயணத்தின் ஒரு பகுதியே முடிந்துள்ளது. சுதந்திரம் பெற்றது இனிமேல் சாதிக்கவேண்டியதைவிட கஷ்டமான காரியமென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். நீங்களும், நானும் ஒரு புதிய வரலாற்றை உருவாக்கியதுடன், ஒரு புதிய அத்தியாயத்தையும் தொடங்கியிருக்கிறோம். நமது அடுத்த வேலை, நாட்டில் நிலவும் ஏழை, பணக்காரன் என்ற பாகுபாட்டை ஒழிப்பதே. நாட்டின் பிரச்சினைகளை சர்க்கார் தீர்க்குமென்று நம்புவது தவறானது; சர்க்காரும், மக்களும் ஒத்துழைத்தால் தான் பிரச்சினை தீர முடியும்.

"நான் உங்களிடம் நாட்டின் பிரதமர் என்ற முறையில் பழக விரும்பவில்லை. பயணத்தில் சேர்ந்து பிரயாணம் செய்யும் பிரயாணியாகவும், தோழனாகவும் பழக விரும்புகிறேன். இந்தியா ஒரே நாடு என்று கருத வேண்டும்; குறுகிய மாகாண வகுப்புவாத உணர்ச்சிகளை உதறித்தள்ள வேண்டும்."

கொரியாவிலிருந்து இந்தியப் படை வாபஸ்?

தென் கொரியரின் கண்டனமே காரணம்

சியோல், அக். 6—

கொரியாவில் ஏற்பட்டுள்ள திடீர் குழப்பத்தின் காரணமாக, தென் கொரியர்களுக்கும், இந்தியப் படைக்கும் பகைமை உண்டாகி, இந்தியப் படைகளின் போக்கு பற்றி அவர்கள், கண்டனம் தெரிவிக்கும் அளவிற்கு நிலைமை வளர்ந்துள்ளது. இதன் விளைவாக இந்தியப் படைகள் வாபஸ் பெற்றுவிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொரியாவிலுள்ள இந்தியத் துருப்புக்களை வெளியேற்ற தென் கொரியா தனது படைகளை உபயோகிக்க நேரிடலாம் என கொரியா வெளிநாட்டு இலாகா மந்திரி நேற்று சட்டசபையில் கூறினார்.

இந்தியத் துருப்புகள் இனி நடந்துகொள்ளும்விதம் பற்றி அறிந்தபின் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும், சொந்த நாட்டிற்கு திரும்பிப் போக மறுக்கும் கைதிகளை இந்தியத் துருப்புகள் மோசமாக நடத்தி வருவதாகவும், இதுபற்றி நடுநிலைமைக் கமிஷனுக்கு தென் கொரிய சர்க்கார் கண்டனக் குறிப்புகள் அனுப்பியுள்ளதாகவும் மேலும் அவர் சொன்னார்.

இந்த நிலையை யொட்டி, தென் கொரியத் தலைநகரமான சியோலில், 50,000 தென் கொரியர்கள் அட்டகாசம் செய்தனர். அதன் பின் அவர்கள் ஓர் கூட்டம் கூடி, இந்தியத் துருப்புகள், கொரியாவை விட்டு வெளியேறவேண்டுமென்றும், இல்லாவிட்டால் தென் கொரியா தற்காப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், கைதிகளைக் கொலை செய்த இந்தியப் படைகளை தண்டிக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றினர்.

இதுபற்றி நடுநிலைமைக் கமிஷன் கே. எஸ். திம்மையா கூறுகையில், 23,000 வட கொரிய, சீனத் துருப்புக்களை இந்தியப் படை பாதுகாக்கின்றது என்றும் கைதி முகாமிலுள்ள கம்யூனிஸ்ட் எதிர்ப்புக் கைதிகள் தப்பியோட முயன்றால், இந்திய துருப்புக்கள் அதைத் தடுக்காதெனவும், சொன்னார்.

நேரு—கருப்புக் கொடி எதிரொலி

★

வட நாட்டு ஏகாதிபத்தியத்தின் தூதுவராக நேரு இருக்கிறார்—தமிழர்களை, திராவிடர்களை 'நான் சென்ஸ்' என எடுத்ததற்கெல்லாம் இழித்துப் பழித்துத் தூற்றுகிறார் என்ற காரணங்களுக்காக, இந்தியப் பிரதமர் நேரு இங்கு வரும்பொழுது, நமது அதிருப்தியை அவருக்கு உணர்த்தும் முறையில், கண்ணியத்துக்கு பழுது ஏற்படாத வகையில், கருப்புக் கொடி காட்டுவது என்று மாவட்டக் கழகங்கள் தீர்மானித்தன.

தீர்மானித்தபடி, சென்னை, செங்கற்பட்டு, மதுரை, கோவை முதலிய இடங்களில் நமது கழகத் தோழர்கள், ஆயிரக் கணக்கில் ஒன்று கூடி, கட்டுப்பாட்டுடன் பண்டிதருக்குக் கருப்புக் கொடி காட்டினர்.

மக்களாட்சி நடைமுறையில் உள்ள எல்லா நாடுகளிலும், ஆளவந்தார்கள் மீது தாங்கள் கொண்டுள்ள அதிருப்தியைக் காட்டிக்கொள்வதற்கு, கருப்புக் கொடி காட்டுதல் என்பது மக்களின் ஜீவாதார உரிமைகளில் ஒன்றாகக் கொள்ளப்பட்டு இருக்கிறது. கருப்புக் கொடி காட்டுவது சட்ட மீறுதலோ, அநாகரீகமான முறையோ அல்ல.

அகில உலகும் ஒப்பமுடிந்த இந்த உரிமைப்படி, நமது கழகத் தோழர்கள் கருப்புக்கொடி காட்டினர். ஆனால் ஆச்சாரியார் சர்க்கார், தனது கட்சித் தோழர்களை விட்டு, கருப்புக் கொடி காட்டிய நமது கழகத் தோழர்களை தடி கொண்டுத் தாக்கச் செய்திருக்கிறார், சென்னையில், மதுரையில், கோவையில், மேட்டுப்பாளையத்தில்! நமது தோழர்கள் கத்திக் குத்துக்கும் பலியாகியுள்ளனர் என்று தெரிய வருகிறது. வருந்துகிறேன். ஆச்சாரியார் சர்க்காரின் பாசிசப் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இரண்டொரு சம்பவங்களில், காங்கிரஸ் கட்சியினரின் வெறிச் செயல் கண்டு, நமது கழகத் தோழர்களும் ஆத்திரம் கொண்டு, காங்கிரஸ்காரர்களைப் பின்பற்றி நடந்து கொண்டதாகக் கேள்விப்படுகிறேன்.

காங்கிரஸ் கட்சியினரின் விரும்பத்தகாதச் செயலுக்கு வருந்தினதைக் காட்டிலும் பன்மடங்கு இதற்கு வருந்துகிறேன். இந்த அருவருக்கத்தகுந்த நடவடிக்கையை நமது கழகத் தோழர்கள் மேற்கொண்டனர் என்பதை, சிறையில் உள்ள பொதுச் செயலாளரும் மற்ற முன்னணி வீரர்களும் கேள்வியுற்றால், உண்மையிலேயே கண்ணீர் விட்டுக் கலங்கி இருப்பர் என்றே உறுதியாக நம்புகிறேன்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களைப் போன்றே, நமது கழகத் தோழர்களும் வெறிச் செயல்களில் ஈடுபடுவது என்பது, கண்ணியம்—கட்டுப்பாடு—அமைதி என்ற நமது கழகக் கோட்பாடுகளுக்கும், நாகரீக முறைக்கும் முற்றிலும் முரண்பட்டதாகும் என்பதை, கழகத் தோழர்களுக்கு அறிவித்துக் கொள்ளுகிறேன். மேலும் அநாகரீகச் செயல்களை, கழகத் தோழர்கள் மேற்கொள்ளக் கூடாது என்று கண்டிப்பாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

காங்கிரஸ்காரர்கள் தாக்கட்டும், உதைக்கட்டும், வெட்டட்டும், நாம் 'எதையும் தாங்கும் இதயம் உண்டு' என்று கூறி தாங்கிக் கொள்ளுவோம்.

காங்கிரஸ் கட்சியினர் மேற்கொண்டுள்ள காட்டு முறையினால், நமது தேகத்தில் புண் ஏற்படலாம், நமது குருதி மண்ணிலே குழையலாம், நமது உயிர் பிரியலாம், ஆனால் நமது 'திராவிடநாடு' லட்சியம் நிறைவேறும் கால அளவு குறையும் என்பதை கழகத் தோழர்கள் மறந்துவிடக் கூடாது. தனி நபர்களை இம்சைக் குள்ளாக்கி விடுவதால், உலகில் அவர்கள் கொண்ட எந்தலட்சியமும் தோற்றுப்போய்விட்டது என்று வரலாறு கிடையாது. இந்தப் பேருண்மையைக் காங்கிரஸ் கட்சியினர் மறந்து, இன்று நடந்து கொள்ளுகிறார்கள். அதே பெருங் குற்றத்தைக் கழகத் தோழர்கள் செய்ய முற்படக் கூடாது எனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நேரு பண்டிதருக்குக் கருப்புக் கொடி காட்ட ஆங்காங்கே இருந்த கழகத் தோழர்கள் முற்பட்டது, நேரு பண்டிதரை அவமானப்படுத்த வேண்டுமென்றோ, அவமரியாதை காட்ட வேண்டுமென்றோ அல்லவே அல்ல. அவருடைய பேச்சும், போக்கும் கண்டு, திராவிட மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை அவர் காணச் செய்யவேண்டும் என்பதற்காகவே, இந்தக் கருப்புக் கொடி அணிவகுப்பு. இது மறுக்க முடியாத உண்மை. இந்த உண்மையைத் தெரிந்திருந்தும், ஆச்சாரியார் சர்க்காரும், காங்கிரஸ் கட்சியினரும் திரித்துப் பொருள் கொள்வது பற்றி, நாம் ஒரு துளியும் கவலை கொள்ளத் தேவை இல்லை.

கண்ணியம், கட்டுப்பாடு, அமைதி ஆகிய மூன்று உயர்ந்த கோட்பாடுகளையும் மறவாது, நேருவுக்குக் கருப்புக் கொடி காட்டி, திராவிடத்தின் உள்ளத்தை வெளிப்படுத்துவதில் வெற்றி கண்டுள்ள கழகத் தோழர்கள் அனைவரையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன்—வாழ்த்துகிறேன். காங்கிரஸ் கட்சியினரின் தாக்குதலுக்கு உள்ளாகி அவதியுறும் தோழர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபம்.

ஏ. கோவிந்தசாமி,
பொறுப்பாளர்,
தி. மு. கழக தலைமை நிலையம்.

★★★★★★★★★★★★

கல்லக்குடி அறப்போர்

கல்லக்குடி அறப்போர் [illegible] மு. கருணாநிதி, இராம. சுப்பையா, மற்றும் தோழர்கள் சிறையில்,

இன்று 87-வது நாள்

★★★★★★★★★★★★

ஐதராபாத் மந்திரி சபை குழு

இன்னும் ஒரு வாரமே உயிர்!

ஐதராபாத், அக். 6—

இன்னும் ஒரு வார காலத்திற்கு மட்டும்தான் தோழர் ராமகிருஷ்ண ராவ் தலைமையில் அமைக்கப்பட்டு இயங்கி வரும் அமைச்சரவைக்கு ஆதரவளிப்போமென்று கூறி, இந்திய உள்நாட்டு மந்திரி டாக்டர் கட்ஜுவுக்கு ஐதராபாத் சட்ட சபையின் 25 உறுப்பினர்கள் கடிதம் எழுதியுள்ளனர்.

அதுபோன்றே ராமகிருஷ்ண ராவுக்கும் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்கள். கட்ஜூ தலையீட்டின் காரணமாகத்தான் இந்த ஒரு வார தவணையும் கொடுத்திருப்பதாகக் காங்கிரஸ் உறுப்பினர்கள் கூறுகிறார்கள்.

சர்க்கார் பஸ்களில் ஆள் குறைப்பு

அக்டோபர் இறுதியில் நோட்டீஸ்

சென்னை, அக். 6—

இதர இலாகாக்களைப்போல், சென்னை சர்க்கார் பஸ் போக்குவரத்து சர்வீசில், குமாஸ்தாக்கள், பஸ் டிரைவர்கள், கண்டக்டர்கள் முதலியோருக்கும், ஆள் குறைப்பு சம்பந்தமாக அக்டோபர் 31-ந் தேதியிலிருந்து நோட்டீஸ் கொடுக்கப்போவதாகத் தெரிகிறது. ஆனால் நிரந்தரமான டிரைவர்களும், கண்டக்டர்களும் விடப்படுவது அரிதாகையால், அவர்கள் சம்பந்தமாக இந்த நோட்டீஸ் அமுல் நடத்தப்படுமா என்பது சந்தேகமே. எல்லோரைப் போலவே அவர்களுக்கும் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருப்பதாக அரசியல் வட்டாரங்களில் பேசிக் கொள்கின்றனர்.

மைசூர் மந்திரி சபையில் நாகண்ண கவுடர்

பெங்களூர், அக். 6—

சென்னை மந்திரி சபையில் விவசாய மந்திரியாக பதவி வகித்துவந்த டாக்டர் நாகண்ண கவுடர், மைசூர் சர்க்காரில் விவசாய மந்திரியாக நியமிக்கப்பட்டார்.

கடலுக்குள் 30,000 அடி செல்லத் திட்டம்

ரோம், அக். 6—

இத்தாலி அருகில், 10,334 அடி கடல் ஆழத்தில் சென்ற புரொபசர் பிக்கார்டு, அடுத்த வஸந்த காலத்தில், பிலிப்பைன் சமுத்திரத்தில் 30,000 அடி கீழே சென்று பார்க்கத் திட்டமிட்டிருக்கிறார்.

உயருகிறது!

லண்டன், அக். 6—

பிரிட்டனில், ஒரு தொழிலாளி இப்போது, வாரம் 9 பவுன் 6 ஷில்லிங் சம்பாதிக்கிறான். இது 1946ல் இருந்ததைவிட 3 பவுன் 6 ஷில்லிங் அதிகம்.

"செவிடனுக்குக் கை ஜாடை காட்டுபவன் ஊமையனு?"

— (:) —

கருப்புகொடி காட்டுவது பற்றி காஞ்சி பொதுக்கூட்டத்தில் ப. உ. சண்முகம்

காஞ்சீபுரம், அக். 5—

நேற்று, இவ்வூர் தோழர் என். எஸ். ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற, சிறைமீண்ட தோழர்களின் பாராட்டுக் கூட்டத்தில் தோழர் ப. உ. சண்முகம் பேசியதாவது:—

"கருப்புக் கொடி காட்டி, கண்டனக்குரல் கிளப்பிய காளைகளை, 'காட்டுமிராண்டிகள் வசை ஏசியுள்ள பண்டித நேரு,' நம் கண்டனத்துக்குரியவரல்ல; பரிதாபத்துக்குரிய பெரிய மனிதர்!

அவர், மேதை — அப்படிப் பேசிவிட்டார்; ஆனால்; நம்மிடையே உலவும் ஆச்சாரியார் கூட ஏசியிருக்கிறார்—இல்லை, நம் கணக்கைத் தீர்த்துக்கட்டி—ருசு எழுதுவுள்ளார்; நம்மை முதல் எதிரி என்று குறிப்பிட்டுள்ளார். அவர் அதற்கு முன்பு சட்டசபையில் குறிப்பிட்ட முதல் எதிரிகளாகிய கம்யூனிஸ்டுகள் சரியாகிவிட்டார்களாம! தோழர் ராமமூர்த்தி அவர்கள் இருக்கும் வரையில் தனக்குப் பயமில்லை என நம்பிக்கை பிறந்துவிட்டது ஆச்சாரியாருக்கு! நம்மை முதல் எதிரி என்கிறார் இன்று! "பாவம் அவருக்குத் தெரியாது போலும்; என்று, ஆச்சாரியார் ஜனநாயகத்தைக் கொன்று ஆட்சி பீடம் ஏறினாரோ, அன்றே, தி. மு. கழகம், ஆச்சாரியாரை தன் முதல் எதிரியாக தீர்மானித்துவிட்டது," என்பது!

அது மட்டுமல்ல; 'நமக்குச் சரித்திரத்தில் தான் இனி இடம்,' என்று சொல்லியுள்ளார்; பாராட்டுகிறேன் ஆச்சாரியாரை. நல்ல வேளையாக, நமக்கு "புராணத்தில் இடம் தாராது போனாரே!" ஆச்சாரியார் முயலாவிட்டாலும் நாம் சரித்திரத்தில் இடம்பெறத்தான் போகிறோம்—இல்லை, இல்லை—பெற்றுவிட்டோம்! நாம் இடம் பெறும் சரித்திரத்தில், ஆச்சாரியாருக்கும் இடம் ஒதுக்கி உள்ளோம்—ஆனால், வீரர் என்று—அல்ல-வீண் வம்புக்காரர் என்று! அரசியல் ஞானி என்று அல்ல—ஆபோசகியர் என்று! புத்திசாலி என்று அல்ல—வெத்து வேட்டுக்காரர் என்று! கலைஞர் என்று அல்ல—கொலைஞர் என்று! பகுத்தறிவாளர் என்று அல்ல — பாதகர் என்று! ஆகவே ஆச்சாரியார் அஞ்சவேண்டாம்!

"கருப்புக் கொடி காட்டியவர் எல்லாம் படிக்கத் தெரியாதவர்கள்; படிக்கத் தெரிந்திருந்தால் கடுதாசி எழுதி இருப்பார்கள்" என்று, ஆச்சாரியார் கூறியிருக்கிறார். நமது கண்டன ஒலிகள், பெற்றோர்களின் கண்டனக் கையொப்பங்கள், கல்லூரிகளின் கடிதங்கள — இவ்வளவையும் வாங்கி வைத்துக்கொண்டு, கடிதம் எழுதவில்லை யென்கிறார்; படிக்கத் தெரியாதவர்கள் கருப்பைக் காட்டுகிறார்கள் என்கிறார்; செவிடனுக்கு கைஜாடை காட்டுபவன் ஊமையனு?

ஆச்சாரியார், கேளாக் காதினராக, மந்த மதிபடைத்தோராக மாறிவிட்ட காரணத்தால்தான், செவிடனுக்கு ஜாடை காட்டுபவனைப் போல, கருப்புக் கொடி காட்டுகிறோம்! ஆக, ஜாடை காட்டுபவன் ஊமையனும் அல்ல; கருப்புக் கொடி காட்டுபவர்கள் கல்லாதவர்களும் அல்ல!

கருடாழ்வார் ராஜகோபாலாச்சாரியார் கேட்கிறார்—'அண்ணாதுரை', பழைய ஆரம்பக் கல்வித் திட்டம் தேவையற்றது என்று சொல்லவில்லையா? அதை மாற்றினால் ஏன் எதிர்க்கிறீர்—என்று!

உண்மை; இன்றும் சொல்லுகிறோம்—பழைய திட்டம் உதவாக்கரை திட்டம் தான்; ஆனால் அதற்காக, அதைவிட மோசமான ஒன்றை ஏற்பதா?

பழைய திட்டம் குமாஸ்தாக்களை உற்பத்தி செய்யும்; புதிய திட்டம் வர்ணாசிரமத்தை வளர்க்கும்!

"பாலை வாழ்வு வேண்டாம்; கூடாரத்தை மாற்று" என்றால், பாம்புப் புற்றுக்கா மாற்றுவது?

'காப்பி', உடலுக்குக் கேடு தரும் என்று டாக்டர் சொன்னால், உடனே கள்ளச் சாராயத்தைக் குடிப்பதா?

ஆயுள்ள மலர் மாலையில் மணமில்லை என்றால், மலத்தைத் தூக்கி வைத்துக் கொள்ளும் மதியீனம் உண்டா?

'ஜாதி' இருக்கவேண்டுமென்று நாம் சொல்லுகிறோமாம்—சொல்லுகிறார் ஆச்சாரியார். கொள்ளையடிக்கப் புகுந்த கள்ளன்—விழித்துக் கொண்டிருக்கும் வீட்டுக்காரனை 'திருடன் விழித்துக் கொண்டிருக்கிறான்' என்று சொல்லுவதைப்போல, 'ஒன்றே குலம்' என்றிருந்த இனத்தை, 'ஆயிரம் உண்டிங்கு சாதி', என்று, பாழாக்கிய பார்ப்பனியத்தின் தலைவர் நம்மைச் சொல்லுகிறார்—'ஜாதி வேண்டும் என்கிறார்கள்'—என்று!

கடந்த சில நாட்களாக ஆச்சாரியாரின் பேச்சைப் பார்த்தால், குடிபோதையேறி உளறுபவனைப் போல இரத்த வெறி ஏறி உளறுகிறார்; உறுமுகிறார்!

போராட்ட சங்கை ஊதிவிட்டார் ஆச்சாரியார்; நாமோ, ஜூலை 15-லேயே முரசம் கொட்டிவிட்டோம்; வாழ்வா, சாவா என்ற முடிவுக்கு வந்துவிட்டோம்; அத்துக்குடி அப்பாக்கியையும், கல்லக்குடி குண்டாந் தடியையும் கையிலேந்தி வருகிறார் ஆச்சாரியார்; ஆறு பேரை பலி வாங்கிய ஆச்சாரியார், ஐவரை சிறையில் தள்ளிய ஆச்சாரியார், ஐயாயிரவரை விருந்தினராக ஏற்ற ஆச்சாரியார், போருக்கு வருகிறார்! இல்லை—இரத்த வெறி கொண்டு வருகிறார்—இல்லை, இல்லை—நரபலி வேண்டி வருகிறார்.

வாருங்கள், வாருங்கள் என் றழைக்கிறேன்;—போர் முரசம் கேட்டு பூரிக்கும் காளைகளே, வாருங்கள், வீரர் பட்டியலில் இடம் பெறத் துடிக்கும் வில்லவன் கோதை வழித் தோன்றல்களே, வாருங்கள்! சேருங்கள்!!" என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அண்ணாதுரை தெரு

30—9—53-ல் நடைபெற்ற பரங்கிப் பேட்டை பஞ்சாயத்து போர்டு கூட்டத்தில், தோழர் இரா. ஆறுமுகம் அவர்கள், "கீரைக்காரத் தெரு" என்று இருந்த தெருவை, "அண்ணாதுரை தெரு" என மாற்ற வேண்டுமென்று கொண்டுவந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

தஞ்சை — தென்னாற்காடு மாவட்ட தி. மா. மு. கழக மாணவர்களுக்கு வேண்டுகோள்

தஞ்சை, தென்னாற்காடு மாவட்ட தி. மா. மு. கழக அமைப்பாளர் தோழர் து சோமசுந்தரம் அவர்கள் அறிவிப்பதாவது:—

திராவிட மாணவ முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் தோழர் சே. ஏ. மதியழகன் அவர்கள் அறிக்கைப்படி, திராவிட மாணவ முன்னேற்றக் கழக கிளைகள் அமைப்பது அவசியம். இரு மாவட்டங்களின் பல பகுதிகளிலிருந்தும் தி. மா. மு. கழகத்தைப் பற்றி மடல்கள் வந்து குவிந்துகொண்டே உள்ளன. அவைகளுக்கு இந்த அறிக்கை தேவையான பதிலைத் தரும் என்று கருதுகிறேன். தோழர்கள் கீழ்க்காணும் விதிகளை அனுசரித்து, கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் முதலியவற்றில், தி. மா. மு. கழகக் கிளைகள் அமைத்து, அமைப்பின் பிரதி ஒன்று "நம் நாடு" அச்சகத்திற்கும், ஒன்று எனக்கும் அனுப்புமாறு வேண்டுகிறேன்.

திராவிட மாணவ முன்னேற்றக் கழகம் அமைப்பதில் திராவிட முன்னேற்றக் கழக அணைச் செயலாளர்கள் உதவி செய்வார்கள்.

தேர்தல் விதிகள்:

1. ஒவ்வொரு கிளைக் கழகத்திற்கும் 25 உறுப்பினர்களாவது குறைந்தது இருக்கவேண்டும்.
2. ஒரு நகரத்தில் பல கல்வி நிலையங்கள் இருந்தால் தனித் தனியே அமைப்புகள் (கிளைக் கழகம்) அமைத்துக் கொள்ளலாம்.
3. ஒரு வட்டத்திலோ, அல்லது நகரத்திலோ ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட கிளைக் கழகங்கள் இருந்தால் அதனுள் ஒரு கூட்டமைப்பு இருப்பது நலம்.
4. ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள கிளைக் கழகங்கள் எல்லாம் சேர்ந்து மாவட்ட கழகம் அமைப்பது அவசியம். இதிலிருந்து மாநில தலைமை நிலையம் அமையவேண்டும்.
5. ஒவ்வொரு கிளைக் கழகத்திற்கும் செயலாளர், அணைச்செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதி ஒருவரும் தேர்ந்தெடுக்க வேண்டும். செயற்குழு உறுப்பினர்கள் பதினைந்துக்குக் குறையாமல், இருபத்தைந்துக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.
6. தேர்தலில் கலந்து கொள்பவர், தேர்தல் அதிகாரியாக இருக்கக் கூடாது.
7. கிளைக் கழகங்கள் உறுப்பினர்களுக்குப் பொது அறிக்கை விட்டு, குறிப்பட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில் தேர்தலை நடத்தவேண்டும்.

நிதியளிப்பு விழாப் பொதுக்கூட்டம்

நாகர்கோவில், அக். 5—

அத்துக்குடி, கல்லக்குடி துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த தோழர்கள் குடும்ப நிதிக்காக, நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகம் "இளைஞன் குரல்" என்ற நாடகம் நடத்தியும், நன்கொடையளித்தும் சேகரித்த 400 ரூபாயை 2—10—53 வெள்ளிக்கிழமை, நகரசபைத் திடலில் நடந்த நிதியளிப்பு விழாப் பொதுக்கூட்டத்தில் தி. மு. கழகத் தலைமை அலுவலகப் பொறுப்பாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., அவர்களிடம் அளித்தது. கூட்டத்திற்கு தோழர் சு. வன்னியப் பெருமாள் தலைமை வகித்தார்.

தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல் ஏ, நாஞ்சில் மாவட்டத்தின் முயற்சியைப் பாராட்டி ஏனைய மாவட்டங்களும் உற்சாகத்தோடு உழைத்து, நிதி சேகரித்து, மேற்படி துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த தோழர்களின் குடும்பத்திற்கு அனுப்ப வேண்டுமென்றார்.

அத்துக்குடி தி. மு கழகத் தோழர்கள் வழக்கு நிதிக்காக கூட்டத்தில் ரூ 35—12—0 சேர்ந்தது.

பின் தோழர் கெ. மனோகரன் அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்து, தக்க சான்றுகளுடன் பேசினார்.

திரு. வி. க. மறைவு பற்றி அனுதாபத் தீர்மானமும் நிறைவேறியது.

கோவை நிகழ்ச்சி

★

கோவையில், பண்டித நேருவுக்குக் காட்டிய கருப்புக்கொடி நிகழ்ச்சியை, முன் நின்று நடத்திய தோழர்களும். அதிற் கலந்துகொண்ட கிளைக் கழகங்களும், படிப்பகங்களும் வருமாறு:-

தோழர்கள் :—

சி. என். சின்னதுரை, அ. பழனிசாமி, எம். கே. ஏ. நடராசு, வெ. கிருட்டிணமூர்த்தி, பாலசுந்தரம், அ. ச. இளங்கோ, கோவை அரசு, பல்லடம் பொன்னுசாமி, உடுமலை நாராயணசிங், குனூர் அற்புதசாமி, சேலம் எஸ். எம். கிருஷ்ணன், பொள்ளாச்சி இராமானுசம், எல். டி. சிதம்பரம், டா. பா. இராசு, காங்கயம் முத்தியாலு, கொடுவாய் இராமசாமி, திருப்பூர் முத்துரத்தினம், ஆனியமுத்தூர் முத்து, பீளமேடு வெங்கிடேசலு, டி. எ. நாச்சிமுத்து, முத்துக்குமார் மற்றும் பலர்.

தி. மு. (கிளைக்) கழகங்கள் :—

குனூர், ஒண்டிப்புதூர், இருகூர், சிங்காநல்லூர், பீளமேடு, பாப்பநாய்க்கன் புதூர், செல்வபுரம், புலியகுளம், இராமநாதபுரம், குனியமுத்தூர், வெள்ளலூர், இடையபாளையம், காந்திபுரம், அத்திப்பாளையம், அந்தியூர், அத்தாணி, ஆனைமலை, வேட்டைக்காரன் புதூர், மாணவர் முன்னேற்றக் கழகம், அரசினர் கலைக் கல்லூரி.

படிப்பகங்கள் :—

தியாகராயர் படிப்பகம், முத்தமிழ் மன்றம் (பாப்பநாயக்கன் பாளையம்), பகுத்தறிவு முன்னேற்றமன்றம் (பீளமேடுபுதூர்), வள்ளுவர் படிப்பகம், (கணபதி), சித்தனைப் படிப்பகம், அழகிரி படிப்பகம் (மாச்சம்பாளையம்), பாண்டியன் படிப்பகம், எழுச்சி மன்றம், வ. உ. சி. படிப்பகம், அழகிரி படிப்பகம் (கோவை), பன்னீர் செல்வம் படிப்பகம், தாளமுத்து—நடராசன் படிப்பகம், முத்தமிழ் வளர்ச்சி மன்றம், தமிழர் படிப்பகம் (பேரூர்), வள்ளுவர் மன்றம் (கோவை).

முத்தமிழ் நடிகர் மன்ற துவக்க விழா

ஒரத்தநாடு, அக். 6—

18—10—53 ஞாயிறு காலை, முத்தமிழ் நடிகர் மன்றத் துவக்க விழாவும், மாலையில் இசை விருந்தும், இரவு 9 மணிக்கு, மன்றத்தாரால், "தேவலோகத்தில்" என்னும் ஓரங்க நாடகமும் நடைபெறும்.

சிந்தாதிரிப்பேட்டை தோழர்கள் விடுதலை

சென்னை, அக். 6—

18—9—53ல், தலைமை மீறி, கண்டனக் கூட்டமும், ஊர்வலமும் நடத்தி, இரண்டு வாரம் சிறை தண்டனை பெற்ற தோழர்கள் இராதாமணி, மதியப்பன், என். வரதன், ப வே. இளந்திரையன் ஆகியோர் 6-10-53 காலை 10 மணியளவில் விடுதலையடைந்தனர்.

சிவகாசியில் பொதுக்கூட்டம்

சிவகாசி, அக். 5—

1-10-53-ல், இந்நகர் சிவன் கோயில் முன்பு தோழியர் கு. சீதாலட்சுமி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழியர்கள் அருண்மொழி, பி. ஓ. எல்., பூங்கோதை பி. எ., தோழர்கள் மு. வசனப்பித்தன், திராவிடமணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அத்துக்குடி கலவர வழக்கு நிதிக்காக உண்டியல் மூலம் பிரித்த ரூ. 15—5—6 தோழியர் அருண்மொழி அவர்களிடம் அளிக்கப்பட்டது.

பவுடர் ஸ்னோ மீது மந்திரி மாணிக்கவேலர் பாய்ச்சல்

சென்னை, அக். 6—

ஜார்ஜ் டவுன் ஏ. ஆர். சி. பெண்கள் உயர்நிலைப் பள்ளியின் 7-வது ஆண்டு விழாவிற்கு தலைமை தாங்கி, மந்திரி மாணிக்கவேலர் பேசுகையில், மாணவிகள் பவுடர், ஸ்னோ, லிப்ஸ்டிக் இவைகளை உபயோகப்படுத்தக் கூடாதென்றார்.

பூச்சிகளைக் கொல்லும் வர்ணம்

லண்டன், அக். 5—

ஈக்கள், தெள்ளு பூச்சி, கரப்பான் பூச்சி ஆகியவை, ஒருவித வர்ணத்தின் மீது உட்கார்ந்தவுடனே கொல்லப்படுகின்றன. வீடுகளுக்கு இந்த வர்ணங்களைப் பூசிவிட்டால், பூச்சிகள் தொந்திரவே இருக்காது. வார்னிஷ் போன்ற திறமுள்ள இந்த வர்ணத்தை 'மிகவும் புரட்சிகரமான விஞ்ஞான கண்டுபிடிப்பு' என்று பத்திரிகைகள் கூறுகின்றன. இதற்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயர் 'லூரியா பார்மல்டிஹைடிரெசின்' என்பதாகும்.

தி. மு. கழக தலைமை நிலைய ஆங்கில வெளியீடு

ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய ஆங்கில நூல்

THE ANSWER

விலை 6 அணு

அண்ணாதுரை, நெடுஞ்செழியன், சம்பத், மதியழகன், நடராசன் ஆகியோர் நீதி மன்றத்தில் தந்த வாக்குமூலங்கள்

விவரம்: பத்மா பிரஸ், காஞ்சிபுரம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, ஆதியப்ப நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.